**தலைப்பு 204 – இந்து சமய மற்றும் பண்பாட்டு அலுவல்கள் திணைக்களம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

இந்து சமய மற்றும் பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் இந்து சமய மற்றும் பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் உள்ளடங்கிய பொழிப்பு அறிக்கை 2022 மே 05 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களம் தொடர்பான வருடாந்த விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2022 மே 27 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

நிதிக்கூற்றுக்களில் 2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான இந்து சமய மற்றும் பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமான உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் காலரீதியில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடிய

வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாகப் பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன், அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களில் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், அதன் பொருண்மை தன்மையை இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்பட வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றை பெற்றுக் கொள்ளும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும், நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

### 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம், பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்துள்ளன.

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் தொடர்பான என்னால் சுட்டிக்காட்டப்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டுள்ளது.

## 2 நிதி மீளாய்வு

### 2.1 செலவு முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது திணைக்களத்தினால் 05 செலவு விடயங்களுக்காக பெற்றுக்கொண்டிருந்த ரூபா 25,950,000 இற்கான ஏற்பாடுகளில் 10 சதவீதம் முதல் 63 சதவீதம் வரையான வீச்சில், கூட்டுத்தொகை ரூபா 3,423,271 தொகைக்கான ஏற்பாடுகள் செலவிடப்படாமல் சேமிக்கப்பட்டிருந்தது. | கொவிட் 19 தொற்றுநோய் காரணமாக தேவை ஏற்படவில்லை. | பெற்றுக்கொண்ட ஏற்பாடுகளுக்கு உரிய செலவு விடயங்களுக்காக செலவிடப்பட வேண்டும் என. |

### 2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மை

தெரிவுக் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுக்கு இணக்கமின்மை சந்தர்ப்பங்கள் கீழே விவரிக்கப்பட்டு காண்பிக்கப்படுகின்றது.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங் களுடன் தொடர்பு | இணக்கமின்மை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப் பிரமாணம் 757(2) மற்றும் 2016 மார்ச் 31 திகதிய 05/2016 இலக்கம் கொண்ட பொது நிதிச் சுற்றறிக்கை | 2021 ஆண்டிற்கான பண்டக் கணிப்பீடு இந்த அறிக்கைத் திகதி வரை நடாத்தப்பட்டிருக்காததுடன், 2021 ஜுன் 15 திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்கப்பட வேண்டிய 2020 ஆண்டிற்கான பண்டக் கணிப்பீட்டு அறிக்கை 07 மாதங்கள் 21 நாட்கள் தாமதித்து கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | கொவிட் 19 தொற்றுநோய் நிலைமை காரணத்தினால் 2020 கணிப்பீட்டு சபை அறிக்கை சமர்ப்பித்தல் தாமதமாகியது. 2021 கணிப்பீடு மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், அறிக்கை கூடிய விரைவில் சமர்ப்பிக்கப்படும். | நிதிப் பிரமாணங்கள் மற்றும் சுற்றறிக்கைக்கு இணங்க பண்டக் கணிப்பீட்டு அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும் என. |
| (ஆ) | 2001 ஆகஸ்ட் 22 திகதிய 18/2001 இலக்கம் கொண்ட பொது நிருவாக சுற்றறிக்கை | 05 வருடங்கள் ஒரே சேவை நிலையத்தில் கடமையாற்றியிருக்கும் அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் வேறு சேவை நிலையத்தில் கடமையாற்றுவதற்காக வாய்ப்பளிப்பதற்காக இடமாற்றம் பெற்றுக்கொடுக்க வேண்டியிருந்த போதிலும், 05 வருடங்கள் முதல் 10 வருடங்கள் வரை, 11 வருடங்கள் முதல் 20 வருடங்கள் வரை மற்றும் 32 வருடங்களை பூர்த்தி செய்திருந்த முறையே 77, 15 மற்றும் 02 ஆக 94 பதவியணி உத்தியோகத்தர்களுக்கு இடமாற்றம் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பொது நிருவாக அமைச்சின் இணைந்த சேவைப் பிரிவில் அமைந்துள்ள இடமாற்றக் குழுவிற்கு உரிய ஆவணங்கள் வருடாந்தம் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் பிரகாரம் உத்தியோகத்தர்களுக்கு இடமாற்றம் பெற்றுக்கொடுக்க வேண்டியிருந்ததென. |

## 2.3 முற்பணங்கள் வழங்கல் மற்றும் தீர்த்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஏனைய திணைக்களங்கள் மற்றும் அமைச்சுக்களுக்கு இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள 03 உத்தியோகத்தர்களிடம் அறவிடப்பட வேண்டியிருந்த கூட்டுத்தொகை ரூபா 46,462 தொகைக்கான கடன் மீதி 27 வருடங்களுக்கு மிகையான காலம் முதல் காணப்பட்ட போதிலும், அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 2020/08/28 திகதிய 01/2020 இலக்கம் கொண்ட பொது நிதிச் சுற்றறிக்கை மற்றும் நிதிப் பிரமாணம் 113 இற்கு இணங்க அரசாங்க உத்தியோகத்தருக்கான முற்பணக் கணக்கில் ரூபா 25,000 இற்கு குறைவான நிலுவை மீதிகளை பதிவழிப்பதற்காக அமைச்சுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | நிலுவைக் கடன் மீதி அறவிடப்பட வேண்டும் என. |

# 3 செயற்பாட்டு மீளாய்வு

## 3.1 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | திணைக்களத்தினால் நிர்மாணிக்கப்பட்டிருந்த யாழ்ப்பானத்தில் அமைந்துள்ள நாவலர் பண்பாட்டு நிலையம் திணைக்களத்திற்கு தேவையான சந்தர்ப்பத்தில் திருப்பி வழங்கும் நிபந்தனையின் மீது 1985 ஆண்டில் யாழ்ப்பாணம் மாநகர சபைக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | | |
| | (i) இரண்டு மாடிகளைக் கொண்ட இந்தக் கட்டிடத்தின் ஒரு மாடி யாழ்ப்பாணம் மாநகர சபையினால் பயன்படுத்தப்பட்டு வருவதுடன், உரிய முறையில் பராமரிக்காமையால் கட்டிடத்தின் கூரை, சுவர் மற்றும் சில கதவுகள் அழிவடையும் நிலையில் காணப்பட்டதுடன், குறிப்பிட்ட திருத்த வேலைகள் மேற்கொள்வதற்கு | நாவலர் பண்பாட்டு நிலையம் யாழ்ப்பாணம் மாநகர சபையினால் கையேற்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | குறிப்பிட்ட திருத்த வேலைகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என. |

| | | |
|---|---|---|
| நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததென பௌதீக பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது. | | |
| (ii) கட்டிடத்தின் ஒரு மாடி பயன்படுத்தப்படாது காணப்பட்ட போதிலும் வட மாகாண பிராந்திய அலுவலகம் ரூபா 40,000 மாதாந்த வாடகைக்கு வேறொரு கட்டிடத்தில் நடாத்தப்பட்டு வருகின்றது. | பதில் வழங்கியிருக்கவில்லை. | திணைக்களத்திற்கு சொந்தமான கட்டிடம் ஒன்று பயன்படுத்தப்படாது காணப்பட்ட போது வாடகை அடிப்படையில் அலுவலகம் நடாத்தப்பட்டக் கூடாது. |
| (ஆ) 2002 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்திருந்த முச்சக்கர வண்டியொன்று 2015 ஆண்டு முதல் ஓட்டப்படாமல் காணப்பட்ட போதிலும் திருத்த வேலை மேற்கொள்வதற்கு அல்லது அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | ஓட்ட முடியாத மற்றும் திருத்த வேலை மேற்கொள்ள முடியாத வாகனங்களை அப்புறப்படுத்த வேண்டும். |

### 3.2 வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2002 செப்தம்பர் 12 திகதிய இலக்கம் 402 கொண்ட பொது நிதிச் சுற்றறிக்கைக்கு இணங்க நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் ஆண்டிற்கான செயலாற்றுகை அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் திணைக்களத்தினால் 2020 ஆண்டிற்கான செயலாற்றுகை அறிக்கை இந்த அறிக்கைத் திகதி வரை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்திருக்கவில்லை. | வருடாந்த செயலாற்றுகை அறிக்கை கூடிய விரைவில் சமர்ப்பிக்கப்படும். | குறிப்பிட்ட கால வரையறையுள் செயலாற்றுகை அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும் என. |

### 3.3 முகாமைத்துவ பலவீனங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| திணைக்களத்தினால் பயன்படுத்தப்பட்டு வரும் நாவலர் பண்பாட்டு நிலையம் குருகுலம் ஆனபந்தி உப அலுவலகம் அமைந்துள்ள கட்டிடமும் அதற்குரிய காணியும் திணைக்களத்திற்கு பெற்றுக்கொள்வதற்காக முறையான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நாவலர் பண்பாட்டு நிலையம் யாழ்ப்பாணம் மாநகர சபையினால் கையேற்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | குறிப்பிட்ட சொத்துக்களை மீண்டும் உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என. |

### 4. மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கை 185 ஆக காணப்பட்டதுடன், மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான பதவியணி 149 ஆக காணப்பட்டமையால் பதவியணியில் 36 வெற்றிடங்கள் காணப்பட்டன. அவற்றில் 03 பிரதி/ உதவிப் பணிப்பாளர் பதவிகள், 19 அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிகள், 6 முகாமைத்துவ உதவியாளர் பதவிகள் மற்றும் நிருவாக உத்தியோகத்தர் பதவிகள் வெற்றிடமாக காணப்படல் திணைக்களத்தின் செயலாற்றுகை மீது தாக்கத்தை ஏற்படுத்துவதற்கு காரணமாக இருந்தது என அவதானிக்கப்பட்டது. | இணங்குகின்றேன். வெற்றிடங்களை நிரப்புவதற்காக பொது நிருவாக அமைச்சிற்கு கோரிக்கைகள் பல சமர்ப்பிக்கப்பட்டன. பதவிகள் நிரப்புவதில் ஏற்படும் தாமத்தை எம்மால் கட்டுப்படுத்த முடியாது. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |